# பாரமற்ற இருதயம்




வேதாகமத்தில் ஆண்டவர் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மாய்மாலமாய் ஜெபிக்கிறவர்களை பற்றி கூறியுள்ளார். அதில் ஒரு முக்கிய வார்த்தையாக அவர்கள் பார்வைக்கு ஜெபம் பண்ணி என்கிற வார்த்தையை நாம் காணலாம். இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் வாய் ஜெபிக்கிறது, அதுவும் மற்றவர்கள் காதுகள் கேட்க, அதுவும் சில வேளைகளில் நீண்ட ஜெபம் பண்ணுகிறார்கள், ஆனால் அது பார்வைக்கு தான் ஜெபம் செய்வது போல் தோன்றினாலும், அது ஜெபமே அல்ல. இன்று நாம் எங்கு பார்த்தாலும் குறிப்பாக இந்த லாக்டவுன் காலத்தில் தொலைக்காட்சியிலும் இணையதளத்திலும் இன்னும் பல வகைகளிலும் பலர் கூடி ஜெபிக்கின்றனர். குறிப்பாக கொரோனாவிற்காக அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அழுது மன்றாடி ஜெபிக்கின்றனர். இவை எல்லாவற்றையும் நாம் காணும்பொழுது இன்னும் ஏன் ஆண்டவர் மனம் இரங்கவில்லை என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இவையெல்லாம் இருதயத்தில் எந்தவித பாரமும், கவலையும் இல்லாமல் உதட்டளவில் செய்யும் மாய்மால கிரியை ஆகும்.

மேலும் சிலர் இப்படி மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிப்பது மூலம் தங்களுக்கு தேவன் நன்மை தருவார் என்று எண்ணுகின்றனர். எனவே உலகில் என்ன நடந்து கொண்டிருக்கிறது துயருறும் மக்களின் நிலை என்ன என்பதை பற்றி கவலைப்படாமல், அதை சிறிதும் கண்டு கொள்ளாமல் ஜெப குறிப்புகளில் இருக்கும் குறிப்புக்களை மட்டும் வைத்து ஜெபிப்பர். இதுவே பாரமற்ற ஜெபமாகும். மேலும் தேவனே காரியத்தை வாய்க்க பண்ணவேண்டும் என்று மற்றவர்களுடைய ஜெப குறிப்புகளுக்காக ஜெபிக்கிற இவர்கள் தங்கள் காரியம் நிறைவேற தேவனை அல்ல மனிதரையே நம்பி ஓடுகின்றனர். மற்றவர்களுக்காக மலையளவு விசுவாசத்தை வெளிப்படுத்துகிற, சத்தத்தை உயர்த்தி ஜெபிக்கிற இவர்கள் தங்கள் காரியத்துக்காக கடுகளவு விசுவாசத்தை கூட வெளிப்படுத்த மாட்டார்கள். பரிசேயர் சதுசேயர் போல இவர்கள் பக்தி வைராக்கியம் உள்ளவர்களைப் போல் காணப்பட்டாலும் இவர்கள் வெறும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்.

இதைப்போன்ற நிலைமையே இன்று பாடல்களை எழுதி அதை இசை அமைத்துப் பாடும் நபர்களிடமும் காணப்படுகிறது. அவர்கள் பாடல் வரிகள் அனைத்தும் கடவுள் இல்லாமல் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, இவ்வுலகத்தில் எதுவும் மேன்மையானது கிடையாது, நிரந்தரமானது கிடையாது, பரலோக வாழ்வு, தேவ ஐக்கியம் அவரது பிரசன்னமும் முக்கியம் என்பது போல் இருந்தாலும், அருமையான இசையும், குரல் வளமும் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையும், உலக பிரகாரமான நடக்கையும், அவர்களின் பாடலுக்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் சம்மந்தம் இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இதனால் முன்பை விட இன்று அதிக இளைஞர்கள் பாடல் ஊழியங்களை செய்தாலும் அது அவர்களுக்கு வேண்டுமானால் ரசிகர் கூட்டத்தை உண்டாக்குகிறதே தவிர, தேவ மகிமைக்கோ சுவிசேஷம் சென்றடைவதற்கோ காரணமாய் இருப்பதில்லை. இப்படிப்பட்ட இருதய பாரமற்ற செயல்களால் எந்தவித ஆவிக்குரிய எழுப்புதலும் மற்றவர்களுக்கு ஏற்படப்போவதில்லை உண்மையான எழுப்புதல் எப்பொழுது உண்டாகும் என்றால் தேவ சித்தத்தை அறிந்து பிதாவே உம் சித்தம் போல் செய்யும் ஐயா என்று ஜெபிப்பதின் மூலமே. அவருடைய சித்தத்தை அறிய, அவருடைய ஐக்கியம் தேவை, அதற்கு உண்மையான தேவனே சார்ந்திருக்கிற இருதயம் தேவை.

ஒருவேளை தேவ சித்தம் இன்னது என்று வெளிப்படுத்தப்படாமல் இருந்தாலும், தேவ சித்தத்தின்படி எது நடந்தாலும் அது நன்மைக்கே, அது நம்மை நித்திய ஜீவனை சென்றடையவே வழிவகுக்கும் என்ற எண்ணத்துடன் ஜெபிக்கவேண்டும். இன்று அநேகர் தாவீதைப் போல நடனமாடி பாட அறிந்திருக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டு சபை காலத்தில் பவுலின் ஆவியோடும் கருத்தோடும் பாடும்

பாடல்கள் தேவை, அதுவே சிறைச்சாலைகளின் கதவுகளை திறந்து, கட்டுண்டவர்களின் சங்கிலிகளை உடைக்கும்.

எனவே இக்கொடிய கொரோனா காலத்திலே நமது ஜெபங்களும் பாடல்களும் தேவசித்தம் நிறைவேறும்படியாய் கட்டுகள் முறியும்படியாய், விடுதலையும் எழுப்புதலும் உண்டாகும்படியாய் இருக்கட்டும். அப்படிப்பட்ட ஒரு சிறு கூட்டத்தை தேவன் தமக்கென இப்பூமியில் வைத்திருக்கிறார். அதில் நாமும் ஒருவராக காணப்பட தேவன் அருள் புரிவாராக. ஆமென், அல்லேலூயா.